# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF : SUBORDINATE JUDGE'S COURT, SIVAGANGAI.

Original Suit : **OS** 101/2016 — Plaintiff : PW5

Deposition of Witness of — Defendant:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு. ராதா கிருஷ்ணன் | District | : | |
| Father /Husband name | : | திரு.கண்ணப்ப சீனிவாசன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 2573 of the day of 14.08.2024

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 5-ம் சாட்சி ஆவேன். எனக்கு வந்த சம்மனை வழக்கறிஞர் திரு. ராஜகோபால் அவர்களிடம் கொடுத்துவிட்டேன். எனக்கு குறிப்பிட்ட தேதியில் நீதிமன்றத்தில் நேரடியாக ஆஜராக தான் சம்மன் வந்தது. எனக்கு சொந்த ஊர் நாட்டரசன் கோட்டை. இந்த வழக்கின் விபரங்களை நான் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். வாதி நாகராஜனை எனக்கு நன்றாகத் தெரியும். வாதி, வாதியின் தந்தை , தாயார் எங்களுக்கு பாத்தியமான வல்லபாய் பட்டேல் தெருவில் உள்ள வீட்டில் சுமார் 50 வருடங்களாக வசித்து வந்தார்கள். என் உடன் பிறந்தவர்கள் மூத்தவர் கண்ணப்ப திருநாவுகரசு , அடுத்து கண்ணப்ப சுப்பிரமணி. நாட்டரசன் கோட்டையில் திருநாவுகரசர் தெருவில் தான் பூர்வீக வீடு. எங்களுக்கு பாத்தியமான பொது குடும்ப சொத்தில் 3 ல் 1 பாகம் பாத்தியம் உள்ளது. நாங்கள் இதுவரை நாட்டரசன் கோட்டையில் உள்ள சொத்தை பாகம் பிரித்து கொள்ளவில்லை. நாட்டரசன் கோட்டையிலுள்ள வல்லபாய் பட்டேல் தெருவில் புல எண் 37/122 , 27 செண்டு எங்கள் மூவருக்கும் பாத்தியமானது. அதிலும் தலா 9 செண்ட் பாத்தியம். நான் சிவகங்கையில் தொழிற்பேட்டையில் அட்டை தயாரிக்கும் கம்பெனி வைத்துள்ளேன். எனது சகோதரர்

கண்ணப்ப சுப்பிரமணி நாட்டரசன் கோட்டையில் அட்டை தயாரிக்கும் கம்பெனி ஸ்ரீ சாய்பாபா என்ற பெயரில் வைத்திருந்தார். என் அண்ணன் சாய்பாபா பக்தர். தற்போது பிரதிவாதி காரைக்குடியில் வசித்து வருகிறார். நாட்டரசன் கோட்டை பேரூராட்சியில் என்னுடைய மனைவி 1986 – 1991 வரை தலைவராக இருந்தார். என் மனைவி தலைவராக இருந்த போது ஞான சேகரன் என்பவர் பேரூராட்சியின் துணைத்தலைவராக இருந்தார். பிரதிவாதியும் நானும் KN என்ற விலாசம் போட்டு தான் கையெழுத்து செய்வோம். ஆங்கிலத்தில் தான் கையெழுத்து செய்வோம். வல்லபாய் பட்டேல் தெருவில் உள்ள 27 செண்டில் கிணறு உள்ளது சுற்றி கற்கால் ஊன்றப்பட்டுள்ளது. எனது அண்ணனான பிரதிவாதி 27 செண்டில் அவருடைய பாகமான 9 செண்டுக்கு நாகராஜனிடம் முன் பணம் பெற்றுகொண்டு ஒப்பந்தம் செய்து கொண்ட விபரம் எனக்குதெரியாது. Ex A1 ல் 1 வது சாட்சியான கையெழுத்து என்னுடையது அல்ல. என்னுடைய அண்ணனுடைய கையெழுத்து எனக்கு தெரியும். என் அண்ணனுடைய கையொப்பமும் எனக்கு தெரியும். வாசாஆ 1 ல் என் அண்ணனுடைய கையெழுத்தும் கையொப்பம் கிடையாது. வாசாஆ 1ல் ஞானசேகரனுடைய கையெழுத்தும் கையொப்பம் கிடையாது . ஞான சேகரனுடைய கையெழுத்து கையொப்பம் எனக்கு தெரியும்.

**குறுக்கு விசாரணை** : பிரதிவாதி தரப்பில் இல்லை.

P V SANDILYAN Digitally signed by P V SANDILYAN Date: 2024.08.14 19:10:59 +0530